This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# பாதி ராஜ்யம்

## 1

என்னைச் சந்தியுங்கள். சட்டம் என் தொழில். லாயர். இங்கிலீஷில் சொல்ல வேண்டியிருக்கிறது. வக்கீல் என்று குடை பிடித்துக்கொண்டு அழுக்குக் கோட்டு அணிந்து கொண்டு பொடி ஆசாமியை ஞாபகப்படுத்த விரும்பவில்லை.

வழக்கறிஞர் என்று தமிழ் சினிமாவில் கடைசி சீனில் மழமழவென்று க்ஷவரம் பண்ணிக்கொண்டு 'கனம் கோர்ட்டார் அவர்களே' என்று சுட்டு விரலை அபரிமிதமாகப் பிரயோகிக்கும் நபரையும் ஞாபகப்படுத்த விரும்பவில்லை.

கொஞ்சம் அடாவடித்தனம், கொஞ்சம் ஜேம்ஸ்பாண்ட், கொஞ்சம் பணக்காரச் சூழ்நிலை, கொஞ்சம் பொய் இவைகள் கலந்த ஒரு வினோத ரசாயனம் நான். இளைஞன்–அதாவது முப்பத்திரண்டு வயதை இளமை என்று ஒப்புக்கொண்டால்.

இன்று காலை ஆபீஸ் அறையைத் திறந்தேன். திறந்து தூசி தட்டிவிட்டு என் முதல் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டேன். (சொர்க்கம்.) கோர்ட்டுக்குப் போவதாக இல்லை. ஹோஷியர்சிங்கின் வழக்கு மூன்று தினங்களில் வரப்போகிறது. அதற்கான ப்ரீஃபைப் பார்க்க வேண்டும். (ஹோஷியார் சிங் ஒரு 'ஹோப்பலஸ் கேஸ்'. கரும்பு வெட்டிக் கொண்டிருந்த போது அகஸ்மாத்தாக அரிவாளால் கர்த்தார்சிங் கையையும் வெட்டிவிட்டேன் என்கிறான். கரும்பு வெட்டுவதில் கவனம் வேண்டாமோ?)

என்ன சொல்ல வந்தேன்? தூசி தட்டிக் கொண்டிருந்தேனா? அப்பொழுது என் ஆபீஸ் எதிரே ஒரு ஹெரால்ட் கார் வந்து நின்றது. அதன் கதவை அலட்சியமாக அறைந்து விட்டு ஒரு பெண் இறங்கினாள். தன் மார்புப் புடவையைச் சாவகாசமாகச் சரி செய்து கொண்டாள். நேராக என் அறை வாசலுக்கு வந்து தயங்கி, "மே ஐ கம் இன்?" என்றாள்.

"யெஸ்," என்றேன். நைலான் சாகரமாக உள்ளே நுழைந்தாள். அவள் அணிந்திருந்த புடவையை நான் விரும்பினேன். நான் மட்டும் தொடர் நாவலின் ஹீரோ சேகராக இருந்தால், அவளைக் கண்ட உடன் காதல் கொண்டிருப்பேன். அழகி. மூக்கு நுனியின் ஒரு வளைவு ஒரு குறை ஒரே குறை. யூனிவர்ஸிடி படிப்பினால் உதட்டோரத்தில் ஓர் அலட்சியம். நல்ல வளர்த்தி. நல்ல வளர்ப்பினால் பொருத்தமான உடை, பொய்யில்லாத வளப்பம். புன்னகைக்காக சுப்ரீம் கோர்ட்வரை வாதாடலாம். மனித வாழ்க்கைக்கு அர்த்தம், காரணம் ஏற்படுத்தும் புன்னகை.

"குட்மார்னிங்", என்றாள்.

"வெரிகுட் மார்னிங்."

"உங்களிடம் ஒரு 'அட்வைஸ்' கேட்க வந்தேன்."

"என் பெயர் கணேஷ்", என்றேன்.